உ

கணபதிதுணை.

# சிதம்பரத்தாலாட்டு.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

1914.

# விளம்பரம்.

## அற்புத பூலோகரம்பை கதை.

இதனல் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக் கதை, பாரீஸ்கதை, குலோபகாவலிகதை நான்குபக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் சொல்லக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றாய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது எற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவது மன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச் செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகாஅற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸகாகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.

உ

கணபதிதுணை.

# சிதம்பரத்தாலாட்டு.

## விநாயகர்-காப்பு.

### வெண்பா.

சீராருந்தில்லைச் சிதம்பரரைத்தாலாட்ட
ஏரார்சிவகாமி யீன்றெடுத்த - பேரான
கந்தருக்குமுன்பிறந்த கற்பகமேமெய்ப்பொருளே
வந்துவரந் தந்தருளுவாய்.

### தாலாட்டு.

சிந்தைமகிழச் சிதம்பரரைத்தாலாட்ட
கந்தருக்குமுன்பிறந்த கற்பகமேமுன்னடவாய் (க)

தானந்தழைக்கத் தரணியுள்ளோரீடேற
ஆனந்தத்தாண்டவமாய் ஆடுஞ்சிதம்பரனே. (௨)

மங்கைசிவகாமி சுந்தரியாள்மாதேவி
அங்கையமுதளிக்க ஆனமிர்தங்கொண்டானே (௩)

நால்வேதங்கோபுரமாய் நாட்டியபஞ்சாக்கரத்தில்
ஆலேசிவாலயமாய் ஆடுஞ்சிதம்பரனே. (௪)

வெண்ணிலவேவெண்மதியே வெண்குடையேதில்லைவரும்
அண்ணலுடன்கூடிவிளை யாடவாவம்புலியே. (௫)

நாகப்பணிபூண்டு நாகங்கரத்துடித்தி
நாகமலர்முடித்து நடிக்குஞ்சிதம்பரனே. (௬)

தேடியதோர்நான்மறையும் தேவர்களுமீடேற
ஆடியுடன்கூடிவிளை யாடவாவம்புலியே. (௭)

பொன்னம்பலத்தே புகுந்துவிளையாடிவர
இன்னம்விளையாட வாரீரிளம்பிறையே. (௮)

வட்டப்பூச்சாத்தி வயிரமுடன்கோடுசுத்தி
இட்டசிங்காதனத்தே யேர்க்கயிருந்தானே. (௯)

கல்லைச்சிலையாக்கிக் கடியபுரமெரித்த
தில்லைச்சிதம்பரனே சிவகாமிநாயகனே. (௧0)

தழலேந்துஞ்சங்கரனே தானுவோதாண்டவமோ
கழலேகதியென்று காட்டுசிதப்பரனே (௧௧)

வாளுடையகண்ணாள் வலவன்திருமகளார்
ஆளுடையநாயகிக்கி அன்பானநாயகனே. (௧௨)

நீங்காதவாரு நிரம்பியதோர்நிர்மலத்தே
ஓங்காரந்தன்னில் வொதிங்கியவுத்தமனே. (௧௩)

சுந்தரன்சம்பந்தன் றுதிக்கின்றசொற்கேட்டு
சிந்தைமகிழத் திருக்கண்மலர்ந்தானே. (௧௪)

ஒருருவாயாதியா யுகந்துவருங்காலத்தே
நீருருவாய்நின்றருளும் நிர்மலனைச்சொன்னாரோ. (௧௫)

வானவர்களெல்லோரும் வந்துதொழவம்பலத்தே
ஆனந்தமாகினின்று ஆடுஞ்சிதம்பரனே. (௧௬)

கங்கைமலர்மங்கை கமலமலர்பொற்பாதம்
செங்கைவருடத் திருக்கண்மலர்ந்தானே. (௧௭)

மண்ணுலகும்விண்ணுலகும் வானோரும்வந்துதொழ
அண்ணம்பலத்தாடும் அனவரதத்தாண்டவனே. (௧௮)

அன்றிருவர்தேட அழலுருவாய்நின்றருளி
மன்றுள்நடமாடும் மயேஸ்வரனைச்சொன்னீரோ. (௧௯)

தேவாதிதேவனே தில்லைச்சிதம்பரனே
மூவாயிரத்தொருவர் ஆனமுழுமுதலோ. (௨௰)

பாலனெனுமார்க்கண்டன் பத்திதனைக்கண்டந்த
காலன்றனையுதைத்து கால்கள்சிவந்தானே. (௨௧)

பல்லாக்குச்சூழ்ந்த பரமசிவநன்னாட்டில்
எல்லாருங்காண யீசனெழுந்தானே. (௨௨)

எத்திசையுமெங்கும் ஏழைபங்கனென்றுசொல்லி
முத்தமிழோர்வந்துதொழ முத்தியளித்தானே. (௨௩)

விண்ணிலுள்ளதேவர்களும் விஞ்சையர்களெல்லோரும்
மண்ணிலுள்ளோரீடேற மன்றுண்டிருந்தானே, (௨௪)

தில்லைமன்றுளாடி திரிபுரத்தைநீறுக்கி
அல்லல்பிறப்பறுக்கும் அனவரதத்தாண்டவனே. (௨௫)

புழுகொழுகுமேனியனே புலித்தோலுடையானே
அழகுதில்லையம்பலத்தில் ஆடுஞ்சிதம்பரனே (௨௬)

தில்லைச்சிதம்பரனே சிவகாமிநாயகனே
தொல்லைப்பிறப்பறுக்கும் சோதிதனைச்சொன்னாரோ. (௨௭)

ஈரேழுலகிலுள்ளோ ரெல்லோருமீடேற
காலெடுத்துநின்றாடுங் கனகசபாபதியோ. (௨௮)

உம்பர்பெருமானே உமையாள்தன்னாயகனே
செம்பொன்மணிமன்றுள் ஆடுஞ்சிதம்பரனே. (௨௯)

அரிபிரமர்தேவர்களும் அரியாதமுப்புரத்தை
சிரித்தெரித்தசேவகனே தில்லைச்சிதம்பரனே. (௫௰)

அன்புற்றசோதியாய் அரியபரனைக்குச்
செம்பொற்றாள்தாழச் சென்றசிதம்பரனே. (௫௧)

செய்யவயல்சூழ் தில்லைச்சிதம்பரத்துள்
அய்யன்மலர்த்தாள் தூக்கி ஆடுஞ்சிதம்பரனே. (௫௨)

ஆணிப்பொன்னம்பலமும் அன்னைசிவகாமியுடன்
மாணிக்கமுதலிபின்றன் மனோன்மணியுந்தான்வாழி. (௫௫)

சிற்றம்பலவாழ்க சிவகாமித்தான்வாழ்க
மற்றுமிராஜரத்னம் மறையோருந்தான்வாழ்க. (௫௪)

சிதம்பரத்தாலாட்டு

முற்றிற்று.

---